

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மக்கள் நீதி மய்யத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கமல்ஹாசன் அவர்கள் சந்தித்து, 2026 சட்டமன்றப் பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்ற கழக கூட்டணிக்கு, மக்கள் நீதி மய்யத்தின் ஆதரவை தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, அமைச்சர் எ.வ. வேலு, அமைச்சர் எம்.ஆர். கே. பன்னீர்செல்வம், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், மக்கள் நீதி மய்யத்தின் பொதுச் செயலாளர் அருணாசலம், துணைத் தலைவர் மௌரியா மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### மக்கள் நீதி மய்யம் இந்தத் தேர்தலில் நேரடிப் போட்டியில்லை!

### தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு நிபந்தனையற்ற ஆதரவு!

# தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ‘திராவிட மாடல்’ அரசு அமைவது முக்கியம்!

## கட்சித் தலைவர், கலைஞானி கமல்ஹாசன் அறிவிப்பு!

***சென்னை, மார்ச் 26 -***

***மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர், கலைஞானி கமல்ஹாசன் அறிவிப்பு வருமாறு:***

உயிரே உறவே தமிழே,

வணக்கம்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில், தேச நன்மைக்காக திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைமையிலான கூட்டணியில் இணைந்தோம். கூட்டணியின் வெற்றிக்காக கடுமையாக உழைத்தோம். அதன் விளைவாக, மக்கள் நீதி மய்யத்தின் சார்பில் இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் இருத்தல். அன்று முதல் இன்று வரை நம்பிக்கையுடன் தனித்துவத்தை விட்டுக்கொடுக்காமல், கூட்டணி தர்மத்தை பேணி வருகின்றோம்.

**பேச்சுவார்த்தை குழுக்கள் காட்டிய அன்பு!**

2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான தொகுதி ஒதுக்கீடு பேச்சுவார்த்தை இரண்டு கட்டமாக நடைபெற்றது. அந்த பேச்சுவார்த்தையின் போது மாநிலத் தமிழ்நாடு முதல்வர் அவர்களும், துணை முதல்வர் அவர்களும், தமிழ்நாடு அமைச்சர்களும் அன்புடனும் மரியாதையுடனும் நடந்துகொண்டார்கள் என்பதை பதிவு செய்வதில் பெருமை.

இன்றைக்கும் இக்கட்டான அரசியல் சூழலில், நமக்கு தன்வசமாக சொல்லிவிடும் தொகுதி எண்ணிக்கையும், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற பரிந்துரையும், மக்கள் நீதி மய்யத்தின் உறுப்பினர்களுக்கும் ஏற்கும் ஏற்புடையதாக இல்லை.

அவர்களது தரப்பில் அத்தகைய நியாயம் இருக்கிறது என்பதை நான் முழுமையாக புரிந்து கொண்டிருக்கிறேன். எப்படியாயினும் தமிழ்நாட்டை காப்பாற்றிட வேண்டுமென மதவாத சக்திகள் சலவழிகளிலும் சூழ்ச்சி செய்துகொண்டிருக்கும் சூழலில் கூட்டணியின் ஒட்டுமொத்த வெற்றி வாய்ப்பே முக்கியமானது. நியாயமானது கூட ஆனாலும், பேச்சு வார்த்தைச் சிக்கல்களால் மக்கள் நீதி மய்யம் தொண்டர்களின் மனோபாவம் உணரப்படாமல்



போனது. எனவே, பேச்சு வார்த்தை என்று எதற்கும் முடிவு எடுக்க முடியாமல் போனது. அந்தக் காரணத்தால், இந்த ஒற்றுமை ஆன கூட்டணியை ஏந்த ஆற்றலும் இல்லை எனவே பயணிக்கும் என் தொண்டர்களின் உணர்வுகளை என்னால் புறக்கணிக்க முடியாது; புறக்கணிக்கவும் மாட்டேன்.

**அன்பின் வடிவம் நம் முதல்வர்!**

தமிழ்நாட்டின் உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்பட்டு, தமிழ் மக்களின் நலன்கள் புறக்கணி க்கப் பட்டு வரும் ஒரு நெருக்கடியான சூழலில், எங்கே எங்கள் பங்கு என்று கேட்பது நீதி கேள்வியின் அடையாளமாக இருக்கிறது. இது தியாகம் அல்ல; கடமை. சுயநலம் அல்ல; பொறுப்பு.

தேர்தல் அரசியலில் யாருமே இப்படி செய்ததில்லையே என்று கேட்பீர்களானால், ஒரு புதிய அரசியல் நாகரீகத்தின் விதை நான் போட்டது என்று பணிவோடு சொல்வேன். முதல்வர் அவர்கள் அன்போடு அளிப்பதை பெருமையோடு மறுப்பதும் அன்பின் வடிவமே.

தங்கள் குடும்பத்துக்காக எத்தனையோ பேர் தன் வீட்டை விட்டு, ஊரை விட்டு, நாட்டை விட்டு எண்ணற்ற தியாகங்களை செய்கிறார்கள். தமிழ்நாடுதான் என் குடும்பம். நான் சீட்டுகளை விட்டுக்கொடுத்திருக்கிறேன்.

**தமிழ்நாட்டுக்கு திராவிட மாடல் அரசு தேவை!**

தமிழ்நாட்டின் முன்னேற்ற த்திற்கு, திராவிட மாடல் 2.0 அரசு அமைவது இன்றைய தேவை. இது வெறும் ஆட்சி மட்டுமல்ல. காந்தி, பெரியார், அம்பேத்கர் ஆகியோரின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் நீதிபரிபாலனம்.

ஆகவே 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் நேரடியாகப் போட்டியிடவில்லை என்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணியின் வேட்பாளர்களை நிபந்தனையின்றி ஆதரிப்பது என்கிற முடிவை திறந்த மனதுடன், தெளிந்த உள்ளத்துடனும் அறிவிக்கிறோம்.

**சுயநலமற்ற அரசியலுக்கு நாம் அடையாளம்!**

என்னையும் என் அரசியலையும் புரிந்துகொண்டு எந்த சுயநலமின்றி, ஒன்பது ஆண்டுகளாக என்னோடு தொடர்ந்து பயணிக்கும் மக்கள் நீதி மய்யத்தின் தொண்டர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் நெஞ்சின் ஆழத்திலிருந்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் சுயநலமற்ற அரசியலுக்கு ஆகச்சிறந்த முன்னுதாரணங்கள். இந்த முடிவு உங்கள் உணர்வுக்கும், உங்கள் நம்பிக்கைக்கும் நான் செலுத்தும் மரியாதை.

அரசியல் களத்தில் தேர்தல் ஒரு பகுதிதான். அதுவே இறுதி என்று ஆகாது. அரசியலில் முற்றுப்புள்ளி என்பதும் கிடையாது. மண்ணுக்கான, மக்களுக்கான, மொழிக்கான நமது போராட்டம் எப்போதும் போல் தீரத்துடன் தொடரும்.

**பதவியேற்பு விழாவில் முதல்வரை வாழ்த்துவோம்!**

மிக விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பதவியேற்பு விழாவில் அவரை மகிழ்ச்சியோடு நாம் சந்தித்து வாழ்த்துவோம் எனும் நம்பிக்கை எனக்கு முழுமையாக இருக்கிறது.

நாளை நமதே!

இவ்வாறு கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

### கோயில் நிலப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட ‘திராவிட மாடல்’ அரசு குழு அமைத்தது - அதனை மறைத்து

# அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் பொய் வாக்குறுதி!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!


*கரூர், மார்ச் 26 -*

அ.தி.மு.க. ஏற்படுத்திய கோவில் நிலப் பிரச்சினைக்கு திராவிட மாடல் அரசு தீர்வு ஏற்பட குழு அமைத்தது. ஆனால் அதனை மறைத்துவிட்டு தேர்தல் வாக்குறுதியாக அளித்த அ.தி.மு.க.வின் செயலை கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி அம்பலப்படுத்தி உள்ளார்.

கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கோயில் இனாம் நில உரிமை தொடர்பான பிரச்சினைகளால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கு தீர்வுகாண ஒரு குழு அமைத்து ஆய்வு செய்யப்பட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்றும் அ.தி.மு.க தற்போது தேர்தல் வாக்குறுதியாக குறிப்பிட்டுள்ளது.

இதில் உண்மை நிலை



என்னவெனில், மேற்கண்ட கோயில் இனாம் நிலப் பிரச்சினைகளை களைய, ஏற்கனவே கடந்த 02.02.2026 அன்று, தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில், தமிழக அரசால் அரசாணை எண்.119 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையால் வெளியிடப்பட்டு, அதில் திருப்பூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியவற்றை தலைமையிடமாகக் கொண்டு, புதியதாக இரண்டு சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, இனாம் நிலங்களின் பத்திர பதிவுகள் உள்ளிட்ட பிரச்சினைகளை முறையாக விசாரணை மேற்கொண்டு தீர்வுகாண உத்தரவிடப்பட்டுள்ளது..

மேலும் இத்துறையின் கீழ், மேற்கண்ட அலுவலர்களுக்கு உதவியாக கீழ்காணும் அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1. வட்டாட்சியர்
2. துணை வட்டாட்சியர்
3. முதுநிலை வருவாய் ஆய்வாளர்
4. தட்டச்சர்
5. குறுவட்ட அளவர்
6. அலுவலக உதவியாளர்

மேற்கண்ட திருப்பூர் (சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்) திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகவும்,

திருச்சிராப்பள்ளி (சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்) திருச்சி, கரூர், திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகவும் செயல்படும்.

மேற்காணும் அரசாணையின்படி இரண்டு புதிய பணியிடங்கள் உருவாக்கி அலுவலர்கள் நியமனம் செய்ய உத்தரவிட்டதின் அடிப்படையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்களாக, திருச்சிராப்பள்ளி அலகிற்கு ஆர். ரமேஷ் மற்றும் திருப்பூர் அலகிற்கு திருமதி.அ.மயில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கரூரில், கோவில் இனாம் நிலப் பிரச்சினைக்கு, கடந்த அ.தி. மு.க. ஆட்சியில், நீதிமன்றத்தில் அ.தி.மு.க. தவறான தகவல்களை சமர்ப்பித்ததால்தான், இன்று மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இவ்வாறு செந்தில்பாலாஜி அதில் குறிப்பிட்டுள்ளார்.

### நான் எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை!

# கமல்ஹாசனின் முடிவு என்னை மிகவும் நெகிழ வைத்துவிட்டது!

## வலைதளப் பதிவில் – கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சி!

*சென்னை, மார்ச் 26 -*

தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு மக்கள் நீதி மய்யம் நிபந்தனையற்ற ஆதரவு அளிக்கும் என, அக்கட்சியின் தலைவர் கலைஞானி கமல்ஹாசன் அறிவித்ததை அடுத்து, வலைதளப்பதிவிட்ட கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், “கமல்ஹாசன் அவர்களுக்கு நான் எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை. அவரது முடிவு என்னை மிகவும் நெகிழ வைத்துவிட்டது” என்று குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வலைதளப்பதிவு வருமாறு:-



**அன்பும் பண்பும் கொண்ட எனது நண்பரும் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவருமான திரு. கமல்ஹாசன் அவர்கள் இன்று அண்ணா அறிவாலயத்தில் என்னைச் சந்தித்து, நடைபெற இருக்கும் சட்டமன்றத் தேர்தலில் நேரடியாகப் போட்டியிடவில்லை என்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணியின் வேட்பாளர்களை நிபந்தனையின்றி ஆதரிப்போம் என்றும் தெரிவித்தார்.**

**இரண்டு அரசியல் இயக்கங்களின் தலைவர்களாக மட்டுமல்ல, நல்ல நண்பர்களாக நாங்கள் இருவரும் இருதரப்புக் கருத்துகளையும் பரிமாறிக் கொண்டோம். “இது தியாகம் அல்ல, கடமை” என்று அவர் சொன்னார். உண்மையில் அவர் செய்திருப்பது தியாகம் தான். அவருக்கு நான் எப்படி நன்றி சொல்வது எனத் தெரியவில்லை. அவரது முடிவு என்னை மிகவும் நெகிழ வைத்துவிட்டது.**

**அவருக்கும் அவரது மக்கள் நீதி மய்ய உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**தமிழ்நாடு முழுவதும் அன்புச் சகோதரர் கமல்ஹாசன் அவர்கள் வலம் வர வேண்டும் என்பது எனது அன்பான வேண்டுகோள். அமைய இருக்கும் திராவிட மாடல் 2.0 அரசு அவரது அன்பினாலும் ஆனது என்பதை இப்போதே தெரிவித்துக் கொள்கிறேன்!**

**பேருள்ளத்துடன் தன்னலத்தைப் பின்னுக்குத் தள்ளி, தமிழ்நாட்டு நலனை முன்னிறுத்தியிருக்கும் அவரது பெருந்தன்மையான முடிவை வரலாறு பாராட்டும்!**

இவ்வாறு அப்பதிவில் - கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### “அடுத்த 30 ஆண்டுகளுக்கு தற்போதுள்ள தொகுதி அளவு எவ்வித மாற்றமுமின்றித் தொடரும்” எனும் உறுதிமொழி

# அரசியல் சட்டத்திருத்தம் வாயிலாக அளிக்கப்பட வேண்டும்!

## சமூக வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

***சென்னை, மார்ச் 26 -***

***“அடுத்த 30 ஆண்டுகளுக்கு தற்போதுள்ள தொகுதி அளவு எவ்வித மாற்றமுமின்றித் தொடரும்” எனும் உறுதி மொழி அரசியல் சட்டத்திருத்தம் வாயிலாக அளிக்கப்பட வேண்டும்! என்று சமூக வலைதளப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.***

***முதலமைச்சர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-***

2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், நாடாளுமன்றத்திலும் மாநிலச் சட்டப்பேரவைகளிலும் மகளிருக்கு இட ஒதுக்கீடு வழங்குவது பரிசீலனையில் உள்ளதாக நாளேடுகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

2026 மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்குப் பிறகான தொகுதி மறுவரையறையை மேற்கொண்ட பின்னரே மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்கப்படும் எனும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் முந்தைய முடிவிலிருந்து (128ஆவது அரசியலமைப்புச் திருத்தச் சட்டம், 2023) விலகுவதாக இது அமைந்துள்ளது. குறிப்பாக, 4 பெரிய மாநிலங்களில் விரைவில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலை மனதில் வைத்தே இது செய்யப்படுவதாகத் தோன்றுகிறது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ள நிலையில், இத்தகைய மிக முக்கியமான நகர்வு மேற்கொள்ளப்படுவது முன்னெப்போதும் நாம் கண்டிராதது. எனினும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும், பெண்ணுரிமைக்காக நூறாண்டுகளுக்கும் மேலாக முன்னின்று போராடி வரும் திராவிட இயக்கத்தின் கொள்கை வாரிசாகவும் இந்த முடிவை எந்த நிபந்தனைகளுமின்றி நான் முழுமையாக ஆதரிக்கிறேன். அதே வேளையில், நியாயமான தொகுதி மறுவரையறை எனும் எங்கள் உரிமையை விட்டுத்தரமாட்டோம் என்பதையும் வலியுறுத்துகிறேன்.

மாநிலங்களின் தற்போதைய தொகுதி அளவு எந்த நிலையிலும் மாற்றப்படக் கூடாது என்பதுதான் தொடர்ச்சியாக நாங்கள் கொண்டிருக்கும் நிலைப்பாடு. இதனை உறுதிசெய்ய, அடுத்த 30 ஆண்டு களுக்கும் தற்போதுள்ள தொகுதி அளவு எவ்வித மாற்றமுமின்றித் தொடரும் எனும் உறுதி மொழி அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் வாயிலாக அளிக்கப்பட வேண்டும்.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதாலும், அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளதாலும், ஜூன் மாதத்தின் தொடக்கத்தில் நாடாளுமன்றச் சிறப்புக் கூட்டத் தொடரினை இதற்காகக் கூட்டி, தொகுதி மறுவரையறை, தொகுதி எண்ணிக்கை உயர்வு, தற்போதுள்ள விகிதாசாரத்திலேயே மாநிலங்களின் தொகுதி அளவு தொடர்வது, அது அடுத்த 30 ஆண்டுகளுக்கு மாற்றப்படாது என்கிற உறுதிமொழி ஆகியவற்றுக்கான அரசியலமைப்புச் சட்டத்திருத்தங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கோரிக்கை வைக்கிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. அண்ணா அறிவாலயத்தில் கழக அயலக அணி நிர்வாகிகளுடன் தேர்தல் தொடர்பாக ஆலோசனை நடத்தினார்.